ஆரூர்பெருமாநே உன(க்)கபயம்[308]
உனக்கபயம்
வேற்ப்பாள்[309] வெதும்பிடுவாள்[310].
பிள்ளை விதனங்[311] கடிதென்பாள்.
ஆகோவென[312] அளுவாள்.
மலரணை மேல் பய்ய சரிவாள்.
ஓகோ மருத்துவமே[313]பிள்ளை
உனக்கேப் பதமென்பாள்[314].
யென்பாளுடள் மெலிவாள்.
யிளமான் போல விளுந்தளுவாள்.
பொன்போல முகம் வேற்ப்பாள்.
புவிமீதில் புரண்டளுவாள்.
புவியப் படை(த்)தோநே.
பொல்லாங்கல்லோ செய்தாள்[315].
நஞ்சோ நடுவயிற்றில்
னாதன் தரிப்பித்தானோ[316].
நானோ யிது படுவோயிது
நடுவொன்றில்லை அய்யயோ
வாளத் தடை[317] போலே
சித்திர வற்ன[318]துடை ரண்டும்
வயறும் குலைத்திடயும்
கடவயறு மிருகுது[319] அய்யயோ
காலத்த உண்டவர் போலே
உடல்கட்டு விழுகுது நெரிய
கண்ணிலே முளிக்க[320] சொல்லுங்கோ.
கன்னிமார்களே நீங்கள்
மாலைதந்தனர் மணமுண்டவர்
மணவாளவரெங்கே
மன்னவா உயிர்கன்னுதே[321].
மதிப்பேன்கண்ணில் முளிப்பாயோ.
கண்ணில் முளிக்க கருதியே மன்னவனாரை
கய்யோடே நீங்கள் கூட்டிவர வேணுமிப்போ[322]
யென்னுட பக்கத்திலிருக்கிற தோளிமார் நீங்கள்
யீராசாவை[323] சென்று அளைத்து வாருமெடி[324] பெண்ணே
கோல வயிற்றிலே கல்லா கனக்குதே[325] பிள்ளை
கூறுங்கே பெற்று பிளைப்பதற்கென்னுயிர் தோளி

---

308 அபயம் – அடைக்கலம்.

309 வேற்ப்பாள் – வேர்ப்பாள்/வியர்ப்பாள்.

310 வெதும்பிடுவாள் – நொந்திடுவாள்.

311 விதனம் – வேதனை. In use in the Kaṉṉiyākumari district dialect.

312 An exclamation of pain.

313 மருத்துவமே – பிரசவம்பார்க்கின்றவளே. Cf. line 547.

314 பதம் – பொழுது.

315 செய்தாள். A scribal error. I read செய்தா<ர்>, as reflected in the translation. It is the god whom the queen addresses at this point.

316 தரிப்பித்தானோ – தரச் செய்தானோ.

317 வாளத் தடை – வாழைத்தடல்.

318 வற்ன – வர்ணம் < Skt. *varṇa*.

319 இருகுது – இறுகுது.

320 முளிக்க – முழிக்க – விழிக்க.

321 கன்னுதே – குறையுதே.

322 இப்ப – இப்பொழுது.

323 யீ–இந்த.

324 எடி – அடி/ஏடி.

325 கனக்குது – மாரமாதல் < Skt. *ghan*.

புத்தியற்று போனால்[326] பொன்னே[327]திருத்தேவியம்மா
பூவுலகானதில் யாபேற்க்கு[328] உள்ளமுறைதான்
யில்லயே யெந்தன்வயிற்றில் சனித்ததோர்[329] பிள்ளை
யீனம் யிரக்கமில்லாத நெட்டூர்[330] குளந்தை
குளந்தை யிதில்லைக் காண்
யினக்கு உதவ மாட்டாது.
கூத்துவனாக[331] வயிற்றில்
ஸெனித்தது[332] கொல்ல
யென்னடி பெண்ணே
மருத்துவமே[333] யின(க்)கிப்போ
யீன்றெடுத்திடவே
லெக்ஷிணமுண்டாக்கால்[334] பாரு.
பாற்த்ததினால் பளுதில்லையே திரு(த்)தேவி
பாருலகானதில் யாபேற்கு உள்ளமுறைதான்
உள்ள முறயே உடன் கொடுவாருங்கோ[335] வென்று
உத்த[336] நிலத்திலே சத்திரமிட்டு[337] யெளுதி
மெளுகியே பன்னீரும் சந்தணம் கொண்டு தொளித்து[338]
மேகவற்ணப் பட்டு னாள்[339] கொண்டு உள்ளூற மூடி
மூடிநிறமரக்கால்[340] நிறனாளியும் வைத்து
முப்பது பொன்னயும் முந்தி[341] கெட்டாகவே[342] வைத்தார்.
கெட்டி வைப்பது வன்ன[343] கலத்திலே யிட்டு
கிறுபயுடநே[344] மடவார்களெல்லோரும் காண
காணவே கிண்ணியில்[345] மூன்று குல யெண்ணை[346] வாங்கி
கன்னியே அஞ்சாதேயென்று வயிற்றினிலிட்டார்.
யிட்டிடும் யெண்ணை யிவள் வயிறானதில் சென்று
யெல்லோரும் காண மெய் னோவுது டங்கிடுமாமே[347].
பத்தான மாஸ்த்தயிலே
பாரரசன் திருத்தேவி
உற்றான ஆளோடி
உறமுறயாள் குணம் சொல்லி
மற்று நிகரொவ்வாத

---

326 போனால். Probably a scribal error. I read போனாய், and emend accordingly. Cf. N10.31d புத்தியது சொன்னாய்.

327 பொன்னே – பெண்.

328 யாபேற்க்கும் – யாவர்க்கும்.

329 சனித்ததோர் – தோன்றியதோர் < Skt. *jan*.

330 *neṭṭūr* – *neṭṭūram* < Skt. *niṣṭhura*.

331 கூத்துவனாக – கூற்றுவன்.

332 ஸெனித்தது – தோன்றியது. See line 540 சனித்தல். Note the different orthography.

333 Cf. line 508.

334 உண்டாக்கால் – உண்டானால்.

335 கொடுவாருங்கோ – கொண்டுவாருங்கள்.

336 உத்த – உற்ற.

337 சத்திரமிட்டு யெளுதி – சித்திரம்வரைதல். Cf. N10.32b-c சந்தணம்மிட்டுமெழுகி.

338 தொளித்து – தெளித்து.

339 பட்டு னாள். Read பட்டினால். Cf. N10.32c.

340 மரக்கால், னாளி (நாழி) – அளவைப்பெயர்; நிற – நிறை.

341 முந்தி – முந்தானை.

342 கெட்டாக – கெட்டியாக.

343 வன்ன – வண்ணம்.

344 கிறுபய் – கிருபை.

345 கிண்ணி – கிண்ணம்.

346 மூன்று குலயெண்ணை – மூன்றுவகையான எண்ணெய்.

347 னோவுது டங்கிடுமாமே. Read நோவு துடங்கிடுமாமே – தொடங்கிவிடுமாமே. Cf. N10.33a வயிறுநோவது வருமாமே.

569 மருத்துவத்தாள் சொல்ப் படியே
570 உரைத்திடுவாள் கருத்திலிட்டு
571 உருத்திரண்ட கெற்ப்பமதாய்
572 பொருத் தெலும்பும் குறுக்கெலும்பும்
573 பொன்னாந சரீரமெல்லாம்
574 வயிற்றில் நெரி புதல்வநென்னா
575 வயிற்றில் நெரிப்பாகுதய்யோ
576 கருங்கல்லோ யென் வயத்தில்[348]
577 கல்லாக கனக்குதம்மா
578 யிந்தசெய்தி தெரியுமானால்
579 யிருப்பேனோ அருந்தவசி[349]
580 கணவனயும் அறியாமல்
581 கருமருந்தெ[350] குடித்தேனில்லை.
582 ஆடுகெற்ப்பம் ஆனாலும்
583 அலறியொரு மறியீனும்[351].
584 மாடு கெற்ப்பம் ஆனாலும்
585 மறுகியொரு கன்று யீனும்.
586 அயிரெட்டி[352] பங்காக[353]
587 அடிமுறிகள் னோகுதம்மா
588 மளைபொளிந்த குளலாளே
589 மலங்காதே பிள்ளை பிறக்குமென்றார்.
590 வல்லவரி கல்லதிலே
591 வருத்தி வைத்த யெளுத்ததுவோ.
592 காரிகயாள் மெய்னோக
593 கன்னிநல்ல குடமுடய
594 கன்னிக்குடமுடய
595 கண்டாளே மருத்துவமும்
596 திருவயிறு வாள்ந்திலங்க
597 சிறந்து ரண்டு[354] குளந்தயது
598 ஒரு குளந்தை பிறந்தபோது
599 ஓவியத்தார் குரவையிட்டார்[355].
600 மறுபடியும் பெண் பிறந்து
601 மனமகிள்ந்தார் தாதியர்கள்
602 மந்திரி மார்தனை யளைத்து
603 வரவளைத்தார் சோசியநெ[356]
604 காறந்த பால் நெய்யது போல
605 கய்யோடே சோசியநெ
606 வந்து அந்த சோசியனும்
607 வளர் சோளன்தனை தொளுதாரே.

(விருத்தம்)

608 தெளிந்திருந்திருந்த செம்பியர் முன்
609 சென்று நின்று சோசியனும்
610 மொளிந்தானே சாஸ்த்திரத்தின்
611 முன்னூலின் முறைப் படியே

---

[348] வயத்தில் – வயிற்றில்.

[349] தவசி – தவம்.

[350] மருந்தெ – மருந்தை.

[351] மறி – ஆட்டுக்குட்டி; யீனும் – ஈனும்.

[352] அயிரெட்டி – ஐ x இரட்டு – பத்து.

[353] பங்காக – தடவை.

[354] ரண்டு – இரண்டு.

[355] குரவையிட்டார் – ஆண் குழந்தை பிறந்தால் சமுதாயத்தில் குரவையிடுதல் மரபு. அதனையே இந்நூலும் குறிப்பிடுகின்றது. பெண் குழந்தை பிறந்தால் குரவையிடுதல் இல்லை.

[356] சோசியன் – சோதிடன்.

612 அளிந்திடுமே[357] பிறந்த பிள்ளை
613 அவனி[358] மோயரிமை[359].
614 யிறந்திடுமே[360] படைவிடுதனில்[361]
615 யிவர் பிறந்த பலாபலநே

(விருத்தம்)

616 யென்ன பலன் கண்டுரைத்தா[362] யியலுடைய[363] சோசியநே
617 மொளிந்தனநே சாஸ்த்திரத்தின் முன்னூலின் முறைப்படியே[364].
618 அளிந்திடுமே படைவீடு அவரிருவர் பிறந்த பலன்.
619 யிளந்த செல்வம் யெளுபது பேர் யிறுதியுண்டும் கண்டாயோ.

(விருத்தம்)

620 ஓது மறயோர் தமயும் உடனரசர் முகம்னோக்கி
621 னாதநருளப்படியானால் நம்மாலே வேறுமுண்டோ
622 அளிந்திடுமே பிறந்தபிள்ளை
623 அஸ்ட்டமே[365] னாலாமிடத்தில்
624 ஆனது கண்டே உரைத்(த)தேன்
625 அரசே யென்றடி தொளுதாரே.
626 அரசாள வாய்(த்)தில்லை செவ்வாய்
627 அஸ்ட்டமே னாலாமிடத்தில்
628 கேது ஒன்பதா(ம்) னாலாமிடத்தில்
629 நின்றராகுவது[366] பொல்லாது
630 ஒப்பாதிங்கொரு[367] னாளும்
631 உள்ளுறக்கம் வாராது
632 அப்போதுவும் பிதாவும்
633 உங்கள் அடிமுதலும் அளிந்து போகுமே.
634 [368]ராரி ஆரி ஆராரோ கன்னே
635 ஆரி வரி ஆராரோ
636 யீனாத வாளயது யிளவாளை
637 யீன்ற கன்னோ[369]
638 கன்றோடிணங்கிய
639 கார்வண்ணரோ
640 கலச(த்)துறிவெண்ணை உண்டவனோ ராரி
641 யெங்கள் குடியாள பிறந்தவனோ
642 யீணாதிள வாளை யீன்ற கண்றோ
643 யென்று சொல்லியே தாதியர்கள்
644 யிரவும் பகலுமாய் தாராட்ட[370]

---

[357] Read இறந்துவிடுமே. I replace அழிந்துவிடுமே with இறந்துவிடுமே of line 614.

[358] அவனி – பூமி.

[359] அரிமை – அருமை – அபூர்வம்.

[360] Read here அழிந்துவிடுமே. Following N10.42a, I replace இறந்துவிடுமே with அழிந்துவிடுமே of line 612.

[361] படைவிடு – படைவீடு – இராசதானி.

[362] கண்டுரைத்தா – கண்டுரைத்தான்.

[363] யியல் – புகழ்.

[364] See lines 610-1; சோதிடன் சோதிடம் பார்த்துக் கூறும் முகூற விளக்கம் பட்டுள்ளது, see lines 617-33.

[365] அஸ்ட்டமே – அஷ்டமி – எட்டாம்.

[366] ராகு – இராகு.

[367] ஒப்பாது – உடன்படாது.

[368] Lines 634-42: தாலாட்டு.

[369] கன்னோ – கன்றோ. The two lines 636-7 express a simile.

[370] தாராட்ட – தாலாட்ட.

நன்றெநருள்படி கால் திருத்தி[371]
நலமாய் வளர்கின்ற னாளயிலே
ஊட்டி உறக்கிற தாதிமாரை
உபாயத்தாலவர்[372] முன்னுறக்கி[373]
பூட்டு நவமணி கதவு தன்னை
புலிய போல சென்று தாள்திறந்து
வேட்ட புலி போலே குதிபாய்ந்து
வீதி தெருவெல்லாம் விளயாடுவார்.
[374]மாட்டு நிரை மேலே சென்று கொண்டு
வலிய[375] காராவும்[376] பொலியெருதும்[377]
ஊட்டிதனை[378] முறித்திருபேரும்
ஒளுங்காய் கிடக்கிற நிரைகளெல்லாம்
காட்டிலிடயர்கள் காணாமல்
கதற கதறவே கொல்லுவாராம்.
கொம்பும் தோலும் குளம் பெலும்பும்
கூண்ட[379] முடியுடன் குடல் கிடக்க
ந(ர)ம்பு சதைகளும் அறிந்து[380] தின்று
நடந்து ஒருவரும் அறியாமல்
மீண்டு கோவிக்கல்[381] உள்புகுந்து
வீதி தெருவெல்லாம் விளயாடுவார்.[382]
பூண்ட பசு நிரை கோன்களெல்லாம்
பொளுது விடிந்தபின் யெளுந்திருந்து
யெருது பசுக்களை காணோமென்பார்.
யேங்கி சேகன்று[383] யெங்கேயென்பார்.
கருதி நிரைகொண்டு போனதாரோ
கைகால்ப் பதறியே கதறிடுவார்.
ஒட்ட சாண்கொம்ப சுட்டிகாளை[384]
உறுக்கி பாய்கின்ற உக்ஷி[385] கொம்பன்
கட்டகருமறை[386] மாக்காளை
காரிகாளையே[387] காணோமென்பார்.
பொட்ட கண்ணொரு முட்டிவாலன்[388]
புண் தளும்புள்ள பின்மறயோன்

---

[371] நன்றெநருள்படி. Corrupt. I read the line on the basis of N10.46b நன்றாய் உருப்பட கை கால் திருத்தி (in order to give good shape to the baby's physique they massage its hands and feet).

[372] உபாயம் – தந்திரம்.

[373] முன்னுறக்கி – முன்னே உறங்கச் செய்து.

[374] The following lines, narrating the killing of the cattle and sheep, seem to be important for the tradition. This episode is found in all the versions, with the Iṭaiyār herdsmen appearing in all versions of the margosa–plough type.

[375] வலிய (M.) (வழக்கு) – பெரிய.

[376] காராவும் – கரும்பசுவும்.

[377] பொலியெருது – பொலிகாளை – பொலிகடா.

[378] ஊட்டி – குரல்வளை, மிடறு.

[379] கூண்ட – கூடின.

[380] அறிந்து – அரிந்து.

[381] கேவிக்கல் – அரண்மனை.

[382] வீதி தெருவெல்லாம் விளயாடுவார். This sentence seems to be displaced. The sentence that occurs in N10.47b would make sense here: விரைவாய்தொட்டிலில் சென்றேறுவாராம்.

[383] யேங்கி சேகன்று. I read -ஏ கன்று; ஏ as an emphatic particle added to யேங்கி: யேங்கி+யே. I follow here the reading in N10.47d rather than that of N8.14c சிவந்த கன்று.

[384] சுட்டிகாளை – நெற்றிச் சுட்டியுள்ள காளை.

[385] உக்ஷி – உச்சி. Cf. N10.47d ஊசி.

[386] மாக்காளை – மாமைநிறக்காளை.

[387] காரி – கறுப்பு.

[388] பொட்ட கண் – குருட்டுக்கண்; முட்டிவால் – குறுகியவால்.

677 குட்டி கருமறை கூளவாலன்[389]
678 கொம்பு முறிந்தாரே காணோமென்பார்.
679 யெட்டி பாற்த்திட நிரய காணோம்
680 யேங்கி சே[390]கன்று யெங்கயென்பார்.
681 நெட்ட[391] தடிகம்பை தறயில்[392]போட்டு
682 நிமர[393] சாடியே[394] விளுந்திடுவார்.
683 கிட்ட கிளயில்லை[395] குடி[396]வாங்க
684 கிடுகிடென்றவர்[397] பதறிடுவார்[398].
685 பாடுபலாபட்டு[399], தண்ணீரூட்டி
686 பரம கோனாரும் பாற்த்தடைத்தார்.
687 கூடு கிடக்க ஆடய்ந்து[400] போச்சே
688 குட்டி கோனாரே குடிகெட்டோமென்பார்.
689 கோனார் பேனாய்[401] போலோடுவார்.
690 கூட மேய்ப்பாரும் வாய்ப்பாறுவார்[402].
691 அப்படியே பலனாளும்
692 ஆடுமாடும் கொன்றறுத்து
693 கொன்றிப் படிவரும் வேளயிலே
694 கோன்களெல்லாம் கூதம்மில்[403]
695 ஒன்றி(த்)தெளுந்தவர்[404] தான்போக
696 ஒருமித்தார்[405] யிடயரெல்லாம்
697 கொங்கமார் கூடியே தாங்கு மடமில்லாமல் கூடினார் செம்பியனாட்டிலே[406]
698 வாள்ந்த மனயில்க் களவு வந்ததில்லை யிது வரயும் மாடாடு சேடம்மொளிய[407] ஆச்சுதே.
699 ஆச்சுதே யினி னாமள் யெல்லோரு மிக கூடி அரசனை காண வென்று அவர்களும்
700 விரவாக வரும் யிடயர் அவருடய பேரேது விளம்பவே கேளும்.
701 [408]ஆண்டி கோன் பாண்டி கோன் அண்ணாமலை கோனும்
702 அளகிய நம்பி கோன் மாலுகோன்
703 நம்பிகோன் தம்பிகோனும் கோன் வேலுகோன்
704 நயினாரும் நல்ல மாட கோனுடன்
705 நல்ல மாடகோனுடன் பெரிய அணஞ்சான் கோனும்
706 நாமகோன் மானுகோன் வேலுக்கோன்
707 வேலுக்கோன் மாலுக்கோன் வீரவாகுகோனும்

---

389 கூளவால் – குட்டைவால்.

390 See line 668.

391 நெட்ட – நெட்டை.

392 தறயில் – தரையில்.

393 நிமர – நிமிர.

394 சாடியே – வேகமாக ஓடியே. The former is the Nāgarkoil dialect. (I thank the bow-song bard T.M.P. for supplying the correct meaning.)

395 கிளய் (M.) – சந்தை (fair, market). (I thank T.M.P. for supplying the correct meaning.)

396 குடி – குட்டி.

397 கிடுகிடு–என்று. An echo word.

398 பதறிடுவார் – நடுங்கிடுவார்.

399 பாடுபலாபட்டு – பாடுபலபட்டு.

400 அய்ந்து – ஐந்து.

401 பேனாய் – பேய் பிடித்த நாய், வெறி நாய்.

402 வாய்ப்பாறுவார் (குமரிமாவட்டவழக்கு) – உளறுவார்.

403 கூதம்மில். A scribal error. I read கூடிதம்மில் on the basis of N10.50a கூடி சேர்ந்து தம்மில்.

404 ஒன்றித்து – ஒருங்கு கூடி.

405 ஒருமித்தார் – ஒன்றுசேர்ந்தார்.

406 செம்பியன் – சோழன்.

407 சேடம் – சொத்து. Cf. N10.50d. See also line 727, containing the orthographically variant form சேமம்.

408 The list of the names of the herdsmen is a sub-set of the more extensive list mentioned in N10.51f.

708 விரவான வீரபாண்டி கோனுடன்
709 நெட்டை கோன் கட்டை கோன்
710 மட்டி கோன் ஆண்டிகோன்
711 விரவான பிச்சாண்டி கோனுடன்
712 பிச்சாண்டி கோனுடன்
713 பெரிய மலை நம்பிக் கோனுடன்
714 பிணமாலை பிறைசூடி கோனுடன்
715 விடுமாடன் பேயாண்டி
716 மாடன் கூளத் தடிமாடன்
717 வீர உடன் வருகின்ற கோங்கன்மார்.
718 கோங்கன்மார் கைதனிலே கடயாலும் தடிக்கம்பும்
719 கொண்டு கூடினார் முக்ஷ்ந்தி வீதியிலே
720 வந்து நின்றான் வயி(ர)வனாத கோன்
721 மைத்துனந் சடைகுட்டி கோனாருடன்
722 குட்டி கோனாரும் கோபாலன் குற்றாலன்
723 குருனாதன் யிருளப்ப கோனாரும்
724 ஆண்டி கோனாரும் பாண்டிதன் கூட்டமும்
725 அண்ணாமலை கோன் அளகிய நம்பிகோன்
726 சோட்ட கோனாரும் காட்டு கிடாகோனும்
727 சேமமொளியவே[409] ஆச்சுதே மாடுகள்
728 மாடு ஆடு நிரயது போச்சுதே
729 வலது கையில் கடயாலும் தூக்கினார்.
730 கடயாலும் தடிக்கம்பும் தோளிலே
731 கடு நடயாக கொண்டு புறப்பட்டார்.
732 விரவாக வளிநடந்தேகியே
733 வேந்தர் மண்டப வாசலில் வந்தனர்
734 வாசலில் வந்து மன்னனை கும்பிட்டு
735 வாய் பொத்தியே விண்ணப்பம் சொல்லுவார்
736 ஆளுவாயே உலகம் அடங்கலும்
737 அன்று சோளன் அசயா மணி[410] கெட்டி[411].
738 [412]வீதி(க்)கே வெட்டி ஆக்ஷினை[413] சேவிப்பேன்[414]
739 விடியுமுன்நே னீ ரண்டிலொன்று சொல்லு
740 சிதம்பரத்தின் மகதேவர் தன்னிடம்
741 திரு நடனம் செய்து முகித்தவர்[415].
742 உலகிறோம்[416] யெங்கள் ஆடு பசுக்களை
743 ஒருனாள் கண்டதை ஒருனாளில் காணிலோம்.[417]
744 நகரி அடிப்பவ(ர்)க்கு மேய்ப்பாரின் சொல்லி[418]
745 னாடியே படைவீடு காற்க்க[419] துடங்கினாரே.[420]
746 காற்த்திருப்பதறியாமல்[421]
747 கன சோளன் தன்னுடநே

[409] சேமம் – சேடம் (698) – சொத்து.

[410] மணி – நீதியின் மணி.

[411] கெட்டி – கட்டி. Cf. N2.23a, N8.15d, N10.53b.

[412] This section (lines 738-41) is out of its actual order; it should follow lines 742-3 rather than precede them. It is also shorter than the corresponding section in N10.56. Cf. N10.56a, N8.17a, N2.25c, where the following discourse between the king and the watchmen precedes line 738: களவுதானும் பிடியாமல் இருந்தாக்கால் (If you don’t catch the culprit/thief [...]).

[413] ஆக்ஷினை – ஆக்கினை < Skt. *ājñā*. Cf. N10.56a, N8.17a.

[414] சேவிப்பேன் – செய்விப்பேன். Cf. N8.17a.

[415] முகித்தவர் – முடித்தவர்.

[416] உலகிறோம் – உளைகிறோம்.

[417] Lines 742-3 are out of their actual order. They should occur after line 737.

[418] நகரி அடிப்பவ(ர்)க்கு மேய்ப்பாரின் சொல்லி. I read this on the basis of N2.25d/N8.17b, as follows: நையடிப்பார் குமைப்பார் எனச் சொல்லி. Cf. N10.56b.

[419] காற்க்க – காக்க.

[420] Cf. N8.17b.

[421] காற்த்திருப்பது – காத்திருப்பது.

கோத்திரத்தில் பிறந்தபிள்ளை
குளங்தை யுருவாகினரே[422]
ஆத்த[423] வொண்ணா பசி யெளும்பி
அடங்காத பசியெளும்பி
குன்றெடுத்து குடைபிடித்த
கோபாலன் தனை[424] விளுங்கி
மீண்டு அவர் காத்திருப்பார்[425]
மிக்க தலையாரிமார்கள்
தாண்டியென்று சொல்லிடுகில்[426]
தானடக்கமாய் கேட்டு
உலகின் மெளுகின் உருகி
ஒன்றொடிமார் தனக்குரைத்து
சுத்திலுள்ள ஆடுப்பசு
சேமமொளிய[427] தின்றபிள்ளை.
தெள்ளுந் தமிள்[428] செம்பியந்தன்
திருத்தேவி மனம் உருகி
துள்ளி மனம் பதபதைத்து[429]
துடிக்க துடிக்க சூள்ந்து தென்றார்.
சூள்ந்த வினை தன்னையே அரசர் மனதில் கொண்டு
சோதித்து னாமும் விசாரிக்கிறோமென்னு
நினைந்தனர் மனந்தனில் உணர்ந்து விணிகேசன்[430]
நிலை நின்ற கள்வரே[431], நீதியுள்ளோர்களே[432]
அந்த சாமம் அரசர் மகவை குளிப்பாட்டி
அள்ளியே தொட்டினில் யேறியே த(ா)ராட்டி
புந்தியே[433] தாசிமார் தங்களு(க்)கஞ்சியே
பொய்யுறக்கமாக உறங்கின்ற போதே
பொய்யுறக்கமாக உறங்கின்றபோதே
வந்தியே ஓடியே மாடாடுயெல்லாம்
வாயார[434] கவ்வி வயிறார[435] தின்றார்.
தின்றுயிருபேரும் புகளேப்பமிட்டு
தேடினார் யிடயர் உறங்குமிடத்தே
அண்டர்[436] திரளான ஆடுமாடெல்லாம்

---

[422] குளங்தை யுருவாகினரே. This makes no sense. I follow versions N2.26a/N8.17b குழந்தையுருதன்னை விட்டு. Cf. N10.57a பருவரை போல் உருவாகி.

[423] ஆத்த – ஆற்ற.

[424] குன்றெடுத்து குடைபிடித்த கோபாலன்தனை – குன்றெடுத்து குடைபிடித்தோன் குலத்துதித்த கோபாலனை.

[425] Between lines 753 and 754 one line is missing; it occurs in N2.26c, N8.17c, and N10.57c: மன்றரசர் மக்கள் தங்கள் மாளிகைக்கே மீண்டனராம்.

[426] சொல்லிடுகில் – சொன்னால். Part of the sentence is missing, but it occurs in N2.26d, N8.17c, and N10.57d: தாண்டியென்று சொல்லிடுகில் தலைபோமென்றுரைத்தனராம்.

[427] சேமம்/சேடம் – சொத்து.

[428] தெள்ளுநதமிள். Read தெள்ளும் தமிழ்.

[429] பதபதைத்து – பதைபதைத்து.

[430] விணிகேசன் – அரசர்கோமான். Cf. N10.59d, N8.18a. See also *TL* s.v.

[431] நிலை நின்ற கள்வரே. I read நிலைநின்றவர்களே/நிலைநின்ற காவலரே – நிலைநின்றகோன் (firm-minded one/king). The vocative in கள்வரே makes little sense if we read it as "thieves." Cf. N2.27c நிற்கின்றகோன்பார்த்து சொன்னாரே நூலோர்; N8.18a நிற்கின்ற கோள்பார்த்து. N10.59d is of no help since it reads the same as N1: நிலைநின்றகள்வரே நீதியிலுள்ளோரே.

[432] The words of the astrologer, as recalled to mind.

[433] புந்தியே – புத்தியாய் (N10.60c), புத்திமகிழ்கின்ற (N2.28b), புந்தி மகிழ்கிற (N8.18c).

[434] வாயார – வாயால்.

[435] வயிறார – வயிறால்.

[436] அண்டர் – தேவர்.

அசயிட்டவாரெனு ஆரோடும்[437] அருளி
சண்டாள பாலகரை யின்று னாம் வைத்தால்
சாவதுவே நம்முடைய சீர்மை சனமெல்லாம்[438]
பண்டாயம்[439] சுங்காம் பணங்கள் திரவியங்கள்[440]
பரணிலே போய் விடும் (யி)வரிருந்தாக்கால்
கொண்டு யிருபேரயும் முதுகாட்டினோடே[441]
கொல்லாமல் போட்டு வருவீறேயென்றார்.
உரைத்த உடநே தலயாரிமார்கள்
உடநே யெடுக்க பதறியே அஞ்சியே
அஞ்சியே பாலகர அவருடைய சூக்ஷம்[442]
ஆருக்கும்[443] தெரியாது பாலருட வளமை
யெடுத்து திரு சோளனாடது கடந்து
யிரு பேரயுங் கொண்டு விடவேதான்
நிரைத்த மரமும் கறடு[444] ஓடயும் அடுத்து
நிணலான[445] வேப்பமரமுட்டிலே விட்டார்.
யிரத்த குளலுடய[446] ரண்டதயுமிட்டு
யெப்படியும் தப்பி பிளயென்றுசொல்லி
திரைகடல் ஒலியென உரைமொளி கேட்டு
செம்பியனும் திகைத்திருந்தானே.
திகைத்தவர்கள் தானிருக்க
செம்பியனும் ஊரவரும்
முகத்தறஞ்[447] சேர் மலர் வேப்பின்
மூட்டகத்தே வாள்ந்தனராம்.
உகந்த புகள் நீலராசன்
உடன்வளர் ஆனைகள்[448] போல
ஆலியப்[449] போலவன் வளர
ஆயிளயும் பருவமதாய்
கேட்டிரோ அண்ணர்களே
கிட்ட ஒரு யிடமிருந்தாள்[450]
னாட்டிலுள்ளோர் நம நகைப்பார்.
நமக்கீனம் பறைந்திடுவார்
வாட்டமில்லாயிங்கிரும் நீர்
வாளுகிறேன் செங்காட்டில்
செங்காட்டில் போவதற்கு
சிவநே நீர் துயில்[451] தாரும்
யின்று துயில் தாருமென்று
யிசக்கியம்மைதான் கேள்க்க
அன்று சிவநருளாலே
ஆகாச துயில் வரவே

---

[437] ஆரோடும் – மற்றவர்.

[438] சனம் – ஜனம்.

[439] பண்டாயம். I read பண்டாரம் (treasury).

[440] திரவியம் – சொத்து.

[441] முதுகாடு – முதையல் (See *TL*) – பழங்காடு.

[442] சூக்ஷம் – சூட்சம். Tirunelvēli dialect.

[443] ஆருக்கும் – யாருக்கும்.

[444] கறடு-கரடு – சிறுகுன்று.

[445] நிணல் – நிழல். Note the different spelling in line 303: யிணல்.

[446] குளல் – குடல். Note the change from ட் to ள்.

[447] முகத்தறஞ்சேர் – முகத் திறம் சேர்.

[448] ஆனைகள் – யானைகள்.

[449] ஆலியம். Tirunelvēli dialect. I read ஆலி – பூதம் (demon). Cf. N10.63c ஆவினம் போல் நீலனோடு ஆயிளையும் வளர்நதனளே (Like a group of heavenly cows / Kamadhenus, the beautiful lady grew up with Nīlaṉ).

[450] இருந்தாள். Read இருந்தால்.

[451] துயில் – துகில். Cf. N10.64b, N8.19c.

நின்ற நிலை பிரியாமல்
நீலனு மோவேம் படியில்
குனறெனவே நின்று கொண்டு
கூட்டமிட[452] துடங்கிவாராம்.
ஆலமிட[453] பாய்ந்ததென்னா[454]
அவனத்தே[455] தோன்றுவானாம்.[456]
சதிப்படுத்தி கொ(ண்)டுபோன[457]
சதிகாற[458] மா[459]மறயோன்
சந்தமில்லாகருங்காட்டில்[460]
சாஸ்த்தா உண்ட வனத்தில்
பிடித்த துயில்[461] நிலத்தில் விள
பெருஞ் சருவமும்[462] அரிகி[463]
கெடுத்து வளி பிளைதோடி
கீரி கண்ட பாம்பது போல
அடித்து மனம் தனைப் பதறி
அய்யாவென்றோடு வானாம்.
அய்யாவே மாபூதம்
அடியேனயும் தின்ன வந்து
அந்த மொளிதனை கேட்டு
அய்யனாரும் யேகிவிட்டார்[464]
பொய்யாம வய்யனுந்தான்
புகளும் குண்டோதரனை விட்டு
கையோடே கைநெரித்து
கதிர்த்து பிடி(த்)தே யடித்தான்.
அடித்தாநே கைகள் ரண்டும்
ஆடாமல் அசையாமல்
பிடித்தாநே யிச்சக்கியுடன்
பிறந்தாரே கொல்லவென்று[465]

---

[452] கூட்டமிட – கொட்டமிட. Cf. N2.31a, N8.19d. கூட்டமிட is also found in N10.65a.

[453] ஆலமிட. The lines 823-4 are out of their actual order. According to version N10, the lines in question should occur later, after line N1.846. Cf. N10.66d ஆலமுடன் பாய்ந்ததன்ன அவ்வனத்தே தோன்றுவாளாம். In N10 the phrase relates to Nīli coming to visit her brother Nīlan̲, bearing delicious food. Asked for the meaning of ஆலமுடன் in version N10, T.M.P., who usually performs that version, suggested that his version, too, was in error, yet he could not offer a satisfying reading. In my opinion, ஆலமுடன் in N10 possibly corresponds to நஞ்சு (poison) or, still more likely, கருமை (blackness; see TL ஆலம் < Skt. *āla*): "She [i.e. Nīli] appears as if darkness spread over the forest" (N10.66d). I suggest this meaning as well for the reading of lines 823-4 above.

[454] என்னா – என.

[455] அவனம் – அவ்வனம் – அந்த வனம்.

[456] Cf. N10.66d தோன்றுவாளாம்.

[457] The text in lines 824-5 is corrupt and out of its actual order. Many syntactical questions remain unresolved. The same phrase is repeated in lines 863-4, there in its proper place. Other versions are silent. N10.65ab, for instance, reads at this point instead as follows: துடங்கியதோர் நாளையிலேதுஷ்டமிருகங்கள்எல்லாம் / அடங்கலுமோ கொன்றுநின்று / அவ்வனத்தே அடங்கிநின்றார். Similarly N8.19d, N2.31a: துடங்கியந்தக் காட்டிலுள்ள தொன்மிருக முள்ளதெல்லாம் / அடங்கலுந்தான் கொன்றுதின்று அவ்வனத்தி லடங்கினராம் (He performed all kinds of atrocities while in the forest, killing and eating all manner of animals). I have attempted to integrate the phrase into the given context, though I am fully aware of its syntactical incompatibility with line 826 and my highly tentative translation.

[458] சதிகாற – சதிகாரன் – மோசக்காரன்.

[459] மா. Lit. "great," but I read it in the sense of நல்ல.

[460] சந்தமில்லா – சத்தம+இல்லாத.

[461] துயில் – துகில்.

[462] பெருஞ்சருவமும் – வாயகன்ற பாத்திரவகை *(TL)*.

[463] அரிகி – சோறுடனே. Cf. N8.20a. See also N10.65c.

[464] ஏகிவிட்டார் – ஏவிவிட்டார்.

[465] For better comprehension I add at this point a passage missing in the base text N1 but found in N2.32a-b, N8.20b, and N10.67a-b: நீலனங்கே இறந்தபின்பு நீலியண்ணன் தனைத்தேடி (N8.20b). [...] அன்னேரம் அவ்வனத்தில் அற்ப்பபிசாசுகள்தான் கூடி முன்னே சென்று (N10.67a-b).

847 யின்னேரம் உன்தமயனயும்
848 யிசமபுரம்[466] யேற்றிவிட்டார்.
849 நின்ற ம(ர)த்தடிதனிலே
850 நேரிளயும் யிருந்தளுதாள்.
851 அன்று அவள் முடித்தகுளல்
852 அவள் முடியாதிருந்தனளே
853 இருந்தனா ளறியாமல்
854 யெளுபது பேர் கரயாளர்
855 திருந்த புகளய்யனுக்கு
856 திருக் கோவில் கெட்ட[467]வென்று
857 பொருந்தும் நல்லவன் காட்டில்
858 பொருப்பனவே வேப்பவெட்டி
859 அருந்த[468] திரு கோவில் கெட்டி
860 அவர் பளகைஊர் புகுந்தாள்[469].[470]
861 யெண்ணமெல்லாம் யெண்ணியெண்ணி
862 யிடகாட்டில்[471] தான் திரிந்தாள்.

(மானாகன் செட்டிக்கு ஆண்குழந்தை பிறத்தல்)

863 சதிபருத்தி[472] கொடுபோன
864 சதிகாற மாமறயோன்
865 செப்பமுள்ள மானாகன்
866 திருவயிற்றில் பிறக்கவென்று
867 ஒப்பமுள்ள சிவனாரும்
868 உரைக்கலுற்றார் அவன்வயிற்றில்
869 சொல்ப்படியே பிறக்கவென்று
870 சொல்லுவாராம் சிவனாரும்
871 விண்ணுலகம் தனில் சேற்ந்த வேதியநேபிரமா
872 மீளவே காவேரிபூம்பட்டணத்தில்
873 மண்ணுலகில் ஒருநீலி வலியபளவினையால்
874 வலியதொரு மான(ா)கன்
875 மனவி திருவயிற்றில்
876 பண்ணனய மொளியாளுக்கு
877 யீரஞ்சி[473] ஒன்றாய்
878 பருவானுடன் மெய் நொந்து
879 பெற்றெடுத்தாளே.
880 பெறறெடுத்தது கண்டு
881 வந்து மானாகன்
882 பிரமயுடன்[474] சோதிரியை
883 தன்னை வரவளைத்து
884 சுத்த[475] கிரகங்களோடு
885 பக்கவாரங்கள்
886 சுத்தினால்[476] பக்கமும்

---

466 யிசம் – யமன்.

467 கெட்ட – கட்ட.

468 அருந்த – அரும், அழகிய. Cf. N10.68b அளிந்த.

469 புகுந்தாள். A scribal error, which I emend on the basis of the pronoun and the closest variant (N10.68b) to புகுந்தா<ர்>.

470 For better comprehension I add here a passage missing in the base text N1 but found in N2.32d, N8.20d: இயக்கியம்மை அழுதுநின்று உரைத்திடுவாள் அவ்வனத்து தெய்வத்திடம் அண்ணரையும் கொன்றுவிட்டார் அவருறைந்து நின்றதொரு விண்ணடர்ந்த வேம்பையுமோ வேரறவே வெட்டிவிட்டார். பண்ணமரும் தமிழப் பழகைப் பதியையும்நா னழிப்பேனென (...)

471 யிடகாட்டில் – இடைகாட்டில்.

472 சதிபருத்தி – சதிபடுத்தி.

473 யீரஞ்சி – இரண்டு ஐந்து.

474 பிரமய் – பிரியமாய்.

475 சுத்த. Em. <உற்ற> on the basis of N10.69b.

476 சுத்தினால் – சுற்றி நால். Cf. N10.69b பூதரிய நாள் பக்கம்.

887 ஒக்கவே யெண்ணிப்
888 கற்ற பல நூலறிவு
889 நன்னூலும் யெண்ணி
890 கற்றவர் தொகுத்தவர்
891 னாவிலுளிருந்தருளி
892 ஆறினால் ஒருபத்து[477]
893 வயதாகுமுன்னே
894 அதிய மாதா பிதாவுக்கு மதிமோசம்
895 மீறிவரும் வயசு பதினாறு பதிநேளி(ல்)[478]
896 மேலும் ஒருநீலி பளிசூள்[479] விதியுண்டும்
897 யேற்ற புகள் சூளவே[480] நீலி பலியாலே[481]
898 யெளுபது பேர் கரயாளர் யிறக்க விதியுண்டும்
899 உண்டும்[482] யிதுக்கு விதியேற்ற நலமில்லை[483]
900 ஊர்வளி தனித்து போ கண்ணாது[484] காணும்
901 பண்டே பருத்த வயிரகொடி[485] வேம்பின்
902 பத்திரம்[486] நெடுங்கயில் யெடுத்திடவும் வேனும்
903 தண்டான மனதாயன் விண்டொளுகு தீரன்[487]
904 தாநெங்கும் சார்த்திரம்[488] தானவே சொல்லி
905 உண்டே நல்மொளியுரை கண்டவர் சொல்லி
906 யிவைரோதாமும் கலந்து பரதவித்து[489]
907 யிளவரசன் ஆனந்தன் யென்று பேரிட்டார்.
908 பேரிட்டு கண்டு மானாகன் தனக்கு
909 புகளான் ஆனந்தன் வளருகிற நேரம்
910 வாக்குடனல்லதோர் பள்ளியில் வைக்க
911 வாத்தியார் தன்னை அளைத்தார் சிணத்தில்
912 நேரிட்டு விக்கிற வினாயகனருளால்
913 நிறனாளி[490] நெல் விடலை[491] கடலை பயறவல்[492] தேன்
914 சீரிட்டு[493] விக்கிற வினாயகநருளால்
915 செல்வ குமாரனொரு பள்ளிக்கிருத்தி
916 பள்ளி புகுந்து படிப்பு துடங்குவாநே.
917 அரினமோ த்துசிநவென்று[494]
918 அண்ணாவி ஓதி கொடுத்தாரே.
919 அளகுடய பாலனும் படித்தான்.
920 தம் அ ஆ இ ஈ உ வென்று
921 அஞ்செளுத்தும் கற்று கொடுத்தாரே.

---

[477] ஆறினால் ஒருபத்து – ஆறினோடு பத்து – பதினாறு.

[478] பதிநேளி(ல்) – பதினேழு.

[479] சூள் – சேரும்.

[480] சூளவே – சேரும். Cf. N10.70a, N2.34b, N8.21.c-d.

[481] பலி – பழி.

[482] உண்டும். I read உண்டோ in order to make the sentence comprehensible.

[483] யேற்ற நலம் – உபாயம். Cf. N10.70a, N2.34c, N8.21d.

[484] போ கண்ணாது – போகொண்ணாது – போக முடியாது.

[485] வயிரகொடி. Cf. N10.70a வைத்த கொடி.

[486] பத்திரம் – இலை.

[487] தண்டான மனதாயன் விண்டொளுகு தீரன். Obscure. Cf. N8.21d தண்டை பிதா கையோடு வனெ்றோள் திரள. Neither the base text N1 nor the variants N8/N2 are clear at this point. The lexical questions remain unresolved. Version N10 is silent on this point.

[488] சார்த்திரம் – சாஸ்த்திரம்.

[489] பரதவித்து. Cf. N8.22c புசித்து. Cf. N10.71b பாவித்து.

[490] நிறனாளி – நிறை நாளி (one-half litre).

[491] விடலை – இளநீர்.

[492] பயறவல் – பயறு அவல்.

[493] சீரிட்டு – சீர்செய்து.

[494] அரினமோ த்துசிந. Perhaps “namo ’stu [te].”

ஆதர உடநே படித்தாநே.
எ ஏ ஐ ஒ ஓ ௌ[495] கூ கா வென்று
ஆக யிருபது அக்ஷரத்தை உன்னியே[496]
அரிசுவடி[497] தான் படித்து கொடுத்தார்.
அரிவிரி கொன்ற[498] வேந்தன்[499]
அன்னயும் பிதா உடநே
ஆனை யேற்றம் கற்று கொடுத்தாரே.
அடிமுறைகளை தானும் கற்றுக் கொடுக்க
மல்லடவு சிரமமுடன்
மற்றுமுள்ள தொளிலுடநே
மானாகன் செட்டி மகன் படிக்க
வரிசை கணக்கும் கற்று கொடுத்தார்.
யிங்கிலிஸ் பாசைகளும்
யிதமான கொந்தங்களும்
யெல்லா வித்தை கற்று கொடுத்தாரே.
யிதமுடநே வாத்தியாரிடத்தில்
சந்தோஸமாய் வளியனுப்பி
தானும் வெள்ளி கோலுடநே[500]
ஆதிநூல் வளியாக ஆனந்தன்
மணம் புணர்ந்தாநே.
மணம் புணர்ந்து யிருந்ததற்பின்
வணிகர் குல ஆனந்தனும்
குணம் புணற்ந்த தகப்பனுக்கு
கொடுமறணம் யெடுத்திடவே
புணற்ந்த புத்திதன்னாலே
போதமெல்லாம்[501] சொல்லுவானாம்.
வாராய்னி[502] ஆனந்தனே
மணமுடித்திடு மகநே
கேளாயோ நீ புதல்வா
கெணித்த[503] நுதல் வேதியநே[504]
னாளாய் சிறுபுதல்வன்
நானு முன்னாள் கேட்டிருந்தேன்
கோளான பேய் மகளால்
குலைப்படுவாய்[505] யென்றுரைத்தார்
மணி மருவு மலைமார்பா
வலு வேம்பின் பத்திரத்தை[506]
ஒரு பொளுதும் நிகளாதே[507]
ஊர்தனித்தும் போகாதே
தனித்து வளி நடவாதே
தங்கூரில்[508] போகாதே
அபத்தம் செய்யும் பளிகாறன்
அவரோடு உறவாடாதே

---

495 ௌ. Obscure. I read <ஔ>.

496 உன்னியே – எண்ணியே.

497 அரிசுவடி – அரிச்சுவடி.

498 கொன்ற – கொன்றை.

499 ஔவையார் இயற்றிய கொன்றை வேய்ந்த என்று தொடங்கும் ஒரு நீதிநூல்.

500 வெள்ளி கோல் – துலாக்கோல்வகை.

501 போதம – போதமை < Skt. *bōdhanā.*

502 னி – நீ.

503 கெணித்த – கணித்த.

504 கெணித்த நுதல் வேதியநே – கணிதன்.

505 குலைப்படுவாய் – கொலைப்படுவாய்.

506 பத்திரத்தை – இலை.

507 நிகளாதே – இகழாதே.

508 தங்கூரில் – தங்கு ஊரில்.

964 கனத்த முதல் தேடுதற்க்கு
965 கருதி புத்தி நினையாதே
966 யித்தலத்தில் நீ பிளைப்பாய்
967 யென்று சொல்லி யிறந்தனரே.
968 சிறந்த புகள் ஆனந்தனும்
969 செட்டி சில காலமெல்லாம்
970 மறந்தனநே தந்தை சொன்ன
971 வலிய உபதேச மெல்லாம்
972 யெல்லாந் தாமறந்தாலும்
973 யேந்தியதோர் பத்திரத்தை
974 வல்லாள ஆனந்தனும்
975 மறவானாம்[509] ஒருனாளும்
976 தந்தையர்க்கு சடங்கறுத்து
977 தானம் செய்து தவமளித்தான்.
978 பதினாறு திரு வயதில்
979 பார்[510] வெள்ளி கோலெடுத்தான்[511].
980 கோலமிகு பட்டாடை
981 கொண்டு விக்க[512] து(ட)ங்கினரே
982 கல்லாலே கொன்றபளி
983 காலம் வந்து முடுக்கிடவே
984 காலம் வந்து முடுக்கிடவே
985 கடும் சரக்கு கஸ்த்துரி
986 யேலம் யிஞ்சி பொற்பராகம்[513]
987 யிசைந்த சந்தண குறடாம்[514]
988 நீலமொத்த கடவளயல்
989 நிறவளசித் தாக்குடநே
990 கோல மிகு பட்டாடை
991 கொண்டு விக்க துடங்கினரே
992 உடக்கியதோர்[515] ஆனந்தனும்
993 ஊளி[516] விதிபடியாலே
994 ஒய்யார தொங்கலுடன்
995 ஒரு தோளில் பக்கறயும்[517]
996 அடக்கியதோர்[518] அவல் பொரிசேர்
997 அதியதாம்[519] பலகாரம்
998 மிடுக்குடய வெள்ளி கோல்[520]
999 மேவியே பாக்கு சுருக்காம்[521]
1000 சுருக்காம் வெத்திலை[522] சுருக்காம்
1001 சுத்தி[523] நவகறண்டவமாம்[524]

---

[509] மறவான் – மறவாமல் இருக்கையில். Cf. N8.24b.

[510] Unclear; perhaps பாரம் – கனம்.

[511] வெள்ளி கோல் – துலாக்கோல்வகை.

[512] விக்க – விற்க.

[513] பொற்பராகம் – புட்பராகம், நவமணியிலொன்று < Skt. *puṣpa-rāga.*

[514] குறடு – மரத்துண்டு.

[515] உடக்கியதோர். See also N8.24b. Cf. N10.75b உறுதிகொண்டு.

[516] ஊளி – ஊழி – விதி. This phrase recurs in line 1037.

[517] பக்கறய் – பக்கரை – பை. The former is in usage in the Tirunelvēli/Kan̲n̲iyākumari dialect.

[518] அடக்கியதோர் – உள்ளடக்கியதோர்/அடுக்கியதோர்.

[519] அதியதாம். A scribal miscopying of a dialect form. I read அரிய தரம் (well made, high-quality); அதிய – அரிய. Cf. N10.75b, N2.39c, N8.24b அரியதரம்.

[520] வெள்ளி கோல் – தராசு.

[521] சுருக்கு – சுருக்குப்பை.

[522] வெத்திலை – வெற்றிலை.

[523] சுத்தி < Skt. *śuddhi.*

[524] கறண்டவமாம் – கரண்டகம் < Skt. *karaṇḍaka.*

1002 யிருக்கால் முக்கால் வெளுத்த
1003 யெண்ண[525] சாய[526] துப்பட்டியாம்
1004 துப்பட்டியாம் அதினிடயில்
1005 சேற்ந்தனல்ல அரஞாணமாம்[527]
1006 கல் பதித்த மோதிரமாம்
1007 காதில் தங்க கடுக்கன்களாம்
1008 யிப்படியே ஆனந்தனும்
1009 யெடுத்து சந்தோஷமுடன்[528]
1010 கொப்படியே[529] தாண்டுவழி
1011 கோதயர்கள்[530] தெருக்கடந்து
1012 முப்பொளுதும் புகள் படைத்த
1013 முடுக்கில் வந்து தோன்றினரே
1014 விலக்கிடுமாம் கோட்டானும்
1015 மிக்க கட்டி சுட்டி முயல்
1016 யிடுக்கியொரு யிறுதலக்ஷி[531]
1017 யெதிராக்குசத்திவர[532]
1018 அடுக்கிருந்து புதுப்பானை
1019 அதிய சட்டி தாளிகும்பம்
1020 ஒருக்கமுள்ள[533] மூக்கறுவன்[534]
1021 ஒருவன் யெதிராக வந்தான்.
1022 நாகமது படம்விரித்து
1023 நடைக்கு முன்னே தோன்றிடுமாம்
1024 மெல்ல வளு[535] கால் தூக்கி
1025 மேவிவைக்கும் வேளயிலே
1026 சொல்லுதல்லோ பல்லி[536] – பலன்
1027 சூனுயத்தால்[537] வினை[538] உனக்கு
1028 கொல்லவென்று யிசக்கி நிற்பாள்
1029 குலைப்படுவாள்யின[539] சொல்லுதே.
1030 நிக்ஷியமச்[540] சாவி[541]யென்பாள்
1031 நீலியோடு கானகத்தில்

---

[525] எண்ண. Probably a meaningless expression, though it could be an exclamation: என்ன. It is unlikely to be எண்ணெய்ச்சாயம், which is found in N8.24c.

[526] சாயம் – நிறம் < Skt. *chāyā.*

[527] அரஞாணம் – அரைஞாண்.

[528] For better comprehension I add here the passage occurring in N8.24c: பழகைநக ரரனதுக்கு என்றுசொல்லி வழியனுப்பி எழுந்துமனை கடந்துவெளி சென்றிடவே.

[529] கொப்படியே. Obscure. Em. <செப்படிவித்தைக்காரர்> on the basis of N10.75d.

[530] கோதயர்கள் – கோதையர்கள்.

[531] யிறுதலக்ஷி – அறுதலி. Cf. N8.24 பறுதலைச்சி.

[532] குசத்தி – குயத்தி.

[533] ஒருக்கமுள்ள. A scribal error. I read according to N8.24 ஒடுக்கமுள்ள.

[534] மூக்கறுவன் – மூக்கறையன். Cf. N8.24.

[535] வளு கால் – வலது கால். Cf. N10.76b மெல்ல மெல்ல கால்.

[536] In N2.40c-41a, N8.25a-b it is a woman soothsayer of the Kurava tribe (*kuṟatti*) who forecasts: முன்னாலே நீமறையோன் முதற்கொடியா ளுன்தேவி உன்மேலே மனதாகி ஊர்கடந்து விரைவாக வழிநடந்தாள் உன்பிறகே வனமதிலே கள்ளியின்கீழ் விழுந்தடியாள் உறங்கையிலே விரைவுடனே கல்லாலே பழுதுபட தலைநெரித்த பாவம்வந்து சூழ்ந்துதடா அழல்விழியாள் கொலைநீலி அவள்பிறந்து வளருகிறாள் கொலைநீலி கண்டுனையும் கோரணிகள் பலவுரைத்து வலைவீசிப் பிடிப்பதுபோல் வழிமறித்துத் பின்துடர்ந்து பச்சமுறும் பெண்களைப்போல் பகட்டியுனை மடிப்பிடித்து.

[537] சூனுயத்தால் – சூனியத்தால் < Skt. *śūnya.*

[538] வினை – தீச்செயல்.

[539] குலைப்படுவாள்யின. A scribal error. I read குலைப்படுவாய் என்று. See also N10.77a.

[540] நிக்ஷியம – நிச்சயம்.

[541] சாவி. I read மச்சாவி (husband). Cf. N10.77.1906 நிக்ஷியம்மச்சாவி என்பாள்.

உக்ஷிதனில்[542] மேல்பளவை
ஊருமட்டும் பின்துடர்வாள்
அக்ஷிளியா[543] பிச்சுளைதான்[544]
அலைகெடுவான்[545] யின சொல்லுதே.
ஊளறியதோர்[546] ஆனந்தன்
ஊளி விதிபடியாலே
யின்றவளி[547] பெருங்காட்டில்
யிடவளிக்கே தோன்றுவாளே.
தோன்றி நின்றாளிசக்கி
துடியிடைகேற்ற[548] பட்டாடயுடன்
பட்டாடை கொய்துடுத்தாள்.
பகள[549] செய்வாய்கள்[550] கனிந்தொழுக
யிட்டாளே முட்டாங்கை[551] – செட்டி
யெப்ப வருவாரென்றெண்ணி யெண்ணி
கட்டான பூங்குளலாள்
கமல முகத்திலே வேர்வை சிந்த
பொட்டானதுவுமிட்டு
போதவே கண்ணதில்[552]
மையுமிட்டாள்.
தொட்டாள் களுத்திலே
தங்க சூரியன் போலே திருத்தாலி
திருத்தாலி தானிலங்க
செம்பகள வாய்கனிந்தொளுக
ஒளுகாய் அதனிடயில்
ஒய்யார தொங்கலும் தோளிலிட்டு
யிட்டாள் சரப்பணிகள்
யேலங் குளலுக்கு யெண்ணயிட்டு
ஊன்றுங் கதிரவன் போல்
ஓடி உலாவும் கதிர் விளியின்
விளியாம் கனபணியாம்
வேடிக்கை காதாம் குமிள் மூக்காம்
மொளியாம் செவ்வாய் மலராம்
முத்து மாணிக்கம் போலே மதிமுகமாம்
மதிதங்கியே[553] முகமும்
மங்கல ஞாணும்[554] நல்பொற் பணியாம்
ஆலால[555] யிலைவயறும்
அன்பு தனத்திலே பொற்ச்சுளியாம்
நூல் போல யிடை துவள
கையில் னோக்கியே
வேல் போல யிருவிளியாம்
விளியும் துடியிடயும்

---

542 உக்ஷிதனில். Nāṭār dialect. உச்சிதமாக – நிச்சயம். Cf. N8.25b உச்சிதமாய்ப் பழகைநகர் ஊருமட்டும் [...].

543 அக்ஷிளியா. I read அச்சழிய. சழிய (distorted, unshapely, squeezed). Cf. N8.25b அச்சொழிய; N10.77d அச்சளிய.

544 பிச்சுளை – பிச்சுடலை. Cf. N8.25b, N10.77d.

545 அலைகெடுவான். A scribal error. Em. அலைகெடுவா<ள்>. Cf. N8.25b, N10.77d அலக்கழிப்பாள்.

546 ஊளறியதோர் – ஊழி அறியதோர்.

547 யின்றவளி. I read இன்று அவள் இப்பெருங்காட்டில்.

548 கேற்ற – கட்டிய.

549 பகள செய் – செம்பவழம்.

550 வாய்கள் – உதடு.

551 முட்டாங்கு – முட்டாக்கு.

552 கண்ண(த்)தில் – கண்ண்+அது+இல் – கண்ணில். Cf. N10.78d. One unlikely alternative would be கன்ன(த்)தில் (She placed a black dot on her cheek [கன்னம்]).

553 மதிதங்கியே – மதிதிங்கள். Cf. N10.78d.

554 நாண் – மாங்கலியங்கோத்த சரடு.

555 ஆலால – ஆலம் – மரவகை.

1073 மெக்ஷிய[556] பூச்சுங்[557]கை வீச்சளகும்[558]
1074 நளியாம் அன்ன நடயாம்
1075 நல்ல விரால் போல கணங்காலும்[559]
1076 கணங்காலும் பாடகமும்
1077 காலில் சிலம்பு அலம்பிடவே
1078 மனம் போலுடன்கலர்ந்த[560]
1079 மஞ்சண[561] வாடையுடயளகும்[562]
1080 துடியான துகள் ரெம்ப[563]
1081 தொங்கலிட்ட[564] ஒய்யாரமுமாய்
1082 மாயாத கை சுருளும்
1083 வாயிலொதுக்கியே பாக்களகும்
1084 தோயாத[565] பொற்க்குடம் போல
((1085 நளியாம் அன்ன நடயாம்
((1086 நல்ல விரால் போல கணங்காலும்
((1087 கணங்காலும் பாடகமும்
((1088 காலில் சிலம்பு அலம்பிடவே
((1089 மனம் போலுடன் கலர்ந்த
((1090 மஞ்சண வாடையுடயளகும்
((1091 துடியான துகள் ரெம்ப
((1092 தொங்கலிட்ட ஒய்யாரமுமாய்
((1093 மாயாத கை சுருளும்
((1094 வாயிலொதுக்கியே பாக்களகும்
1095 நெறியுமதி[566] தைத்தது[567] போல
1096 ஒரு நீலியெதிர் வந்து தோன்றினாளே.
1097 யெதிர் வந்த செட்டி
1098 யக்கண்டிசக்கி(யம்)மன்[568] மகிள்ந்து
1099 யினி கெட்டி கெட்டி யென்று ஆடினாளே.
1100 மதுரமொளி மடவார் மனது பிரிசமுற்று[569]
1101 மகதேவர் தஞ்சமென்று வாள்த்தினாளே.
1102 யிது நன்று நன்று பளி[570]யெங்கே போனாலும்
1103 விடேன்[571] யென் பளி கொள்வேநென்று போற்றினாளே.
1104 அதன்கனகமுதல் அவனி முளுதறிய
1105 அதோ செட்டி வாறாநென்று ஆடினாளே.
1106 ஆடினாள் பாடினாள் ஆனந்த வாய்சொரிய
1107 அதோ செட்டி வாறாநென்றங் காடினாளே.
1108 ஓடினாள் சந்தோஸம் கொண்டு
1109 உலகமெல்லாம் குலுங்க
1110 உடயவரே தஞ்சமென்று போற்றினாளே.

---

[556] மெக்ஷிய – மெச்சிய.

[557] பூச்சுங். Read மஞ்சள் பூச்சு (smearing turmeric).

[558] கை வீச்சளகும் – கை வீச்சழகும்.

[559] கணங்காலும் – கணுக்கால்/கணைக்கால். Colloq. – காற்பரடு. Cf. N8.26a, N10.80b.

[560] கலர்ந்த – கலந்த. Cf. N10.80b.

[561] மஞ்சண – மஞ்சள்+நெய்.

[562] மஞ்சண வாடையுடயிளகும் < Skt. *vāṭa.* A more likely alternative is மஞ்சணை வாசனையுடைய அழகும்; the reference is to a medicated aromatic mixture that places a person under a spell.

[563] ரெம்ப – நிரம்ப.

[564] தொங்கல் – பருத்த பூமாலை.

[565] தோயாத. A more likely alternative is தேயாத; cf. N10.80c.

[566] நெறியுமதி – நிறையும் மதி.

[567] தைத்தது. Cf. N8.26b நெறியுந் திகைந்தது.

[568] செட்டிய கண்டு இசக்கி – செட்டியை கண்டு இசக்கி.

[569] பிரிசமுற்று – சந்தோசமுற்று.

[570] பளி – பழிகாரன்.

[571] விடேன் – விடமாட்டேன்.

1111 துணை செய்வாய் மகதேவர்
1112 துக்ஷ்ணக்காரி[572] நீ நல்ல[573]
1113 சொல்லிக்கொண்டு பளியிப்போ
1114 கொள்வேநென்றாள்.
1115 பளிகொள்வேன் கொள்வேநென்று பாரசிலம்பலம்ப பய்யவே[574] செட்டி முகம் னோக்கினாளே.
1116 அளிசேர்[575] குடல்மடவார்[576] ஆனந்தன் செட்டியக்கண்டு அன்னம் போல் நீலியெதிராக தோன்றினாளே.
1117 யெதிர் வந்து தோன்றியபின் யேங்கியே மனம் பதறி மதிகுன்றி மெய்நடுங்கி
1118 வாயலர்ந்து[577] கால் பதறி விதி வந்து சூள்ந்து தென்று விரல்[578] வணிகன் ஆனந்தனும்
1119 சதிவந்து சேற்ந்த தென்று செட்டி ஒக்கவே தள்ளாடப்பட்டனரே[579]
✳2274 பதறி பதறி மனம் கலங்கி செட்டி பாக்கம் பாக்க[580] முளிப்பாகி[581]
✳2275 சிதற்றுடன் மனது கலங்கி சிந்தை கலங்கிவிட்டாநே.
✳2276 குமரகுருபரா[582] யென்ன கோடி[583]மனம் கலங்கி விட்டான்.
✳2277 பதறி மனம் கலங்கிவிட்டான் பாவி கெடுத்தாளே யென்றான்.
✳2278 யெலியின[584] குஞ்சிபோல்[585] பதுங்கி யிடகாட்டிலே வந்து மனம் கலங்கி
✳2279 கடுவாய்[586]கண்டவர் போலே அஞ்சி கலங்கி மலங்கிவிட்டாநே.
✳2280 தொட்டுபிடியாளென்றேன் பதறி கிட்ட வராமல் முடுகி
✳2281 பட்டு கொடுக்கவே[587] யிவள்க்கு பளிதான் கொடுக்க பிறந்தேன்
✳2282 யெட்டி போவோமென்று உன்னி செட்டி கொள்வாள் நம்மையென்று
✳2283 முட்டுக்காறியென்று[588] செட்டி விட்டுபோகாளென்று கெட்டி[589]
✳2284 தட்டுமுட்டுதலைகொண்டு கட்டுவிட்டேநென்று யெண்ணி
✳2285 விட்டுவிட்டாளென்று தலை தட்டுமுட்டு கொள்ளுவானாம்.
✳2286 கண்டாளவன் படும் பாட்டை காரிகை மாய யிசக்கி
✳2287 செட்டி திண்டாடும் வாற்த்தய கண்டு சிந்தகளி கூர்ந்த தேவி
✳2288 வந்து அகப்பட்டாநென்னா[590] பளிவாங்காமல் னாங் விடுவேனோ.
✳2289 தள்ளாடி உள்ளம் கலங்கி கதிரவன் கண்ட தாமரை போலே
✳2290 உள்ளே உடலும் விறைத்து

---

[572] துக்ஷ்ணக்காரி – துஷ்டக்காரி – துட்டை < *Skt. duṣṭā*. Cf. N10.81.2016, N8.26c.

[573] நீ நல்ல. A scribal error. Em. <நானல்ல> on the basis of N10.81c and N8.26d.

[574] பய்யவே – பையவே.

[575] அளிசேர் – அணிசேர் – அழகு சேர்த்தல். Cf. N8.27a, N10.82b.

[576] குடல் – குழல். Cf. N8.27a.

[577] வாயலர்ந்து – வாய் உலர்ந்து.

[578] விரல் – விரள்தல்.

[579] Line 1119 is followed directly by lines 2274-91. This insertion is out of its actual order in the original hand-written Ms. provided to me. This strongly suggests that the palm leaves on the basis of which the hand-written manuscript was produced got mixed up at some point.

[580] பாக்கம் பாக்க. A scribal error. The copyist of the palm leaves obviously again confused the letters ா and ர். I read பரக்கப்பரக்க.

[581] முளி – முழி – விழி. Colloq.

[582] குமரகுருபரா – குமரகுருபரனாம். Another name for the god Murukaṉ. The word appears in N10.151d.3758 and N8.53b.1804, but in a different context. Therefore I see no way to tell where this passage, obviously out of its actual order, should be placed.

[583] கோடி. Probably கோடு – கொடுமை (hardship; see Fabricius: கோடு). It is very unlikely to be கொடிய in the sense of "crooked."

[584] யெலியின – யெலியின்.

[585] குஞ்சிபொல் – குஞ்சு போல்.

[586] கடுவாய் – கழுதைப் புலி (hyena).

[587] பட்டு கொடுக்க – இறந்து போக (to die).

[588] முட்டுக்காறி – முக்காட்டுக்காரி (veiled woman).

[589] கெட்டி – கட்டி.

[590] என்னா. I read என்றாள்.

*2291 செட்டி ஒக்கவே தள்ளாட பட்டனரே.
1120 தள்ளாடப்பட்டனரே தமிள்வணிக பெருமாளே
1121 முள்ளாடும் கரும்சூரைமூட்டடந்த[591] காட்டோடே
1122 துள்ளாடபடவேண்டி[592] துணையுமில்லா தனில் பொறந்தீர்[593]
1123 வெள்ளாட்டிக்காகவல்லோ
1124 விளிச்சா[594] பெண் சாத்துகறிர்[595]
1125 யேன் காணும் உம்மோடே
1126 னா நிணங்கி யிருப்பதெல்லாம்
1127 தான் காண பயந்தீரே
1128 சய்யல்[596] கண்டால் தெரியாதோ
1129 சய்யல் கண்டால் தெரியாதோ
1130 தனப்பட யாரினப்படயார்[597]
1131 நொய்ய மனத்தரசர் முகம்
1132 னோக்குவதும் னோக்காதோ
1133 வெய்யில் நடை தானடந்து
1134 வெப்பெடுத்து னாவுணர்ந்து[598]
1135 துய்ய மனதுடயவரே
1136 சற்றே சுண்ணாம்பு தாருமென்றார்.
1137 தாருங்காண் சுண்ணாம்பு
1138 தந்து யிணல்[599] மீதிலிருந்து
1139 ஆதினமுள்ளதலம்[600]
1140 ஆனதுண்டால்[601] னாலு திக்கும்
1141 பாரி[602]னாம்முக்காட்டில்[603]
1142 பதைப்பிறவே பறைந்திருக்க[604]
1143 பாரிர் னாமுக்காட்டில்
1144 பதைப்பிறவே பறைந்திருக்க
1145 துள்ளி முந்தி ஓடிவந்தாள்.
1146 சுண்ணாம்பு தாருமென்றாள்.
1147 பள்ள முண்டால் பாருமென்றான்[605].
1148 பறைந்திருக்க வாருமென்றாள்.
1149 கள்ளமுண்டு யிவள் கய்யிலே
1150 கண்ட வர்க்கும் தெரியாதோ
1151 தாளாயோ[606] யென்றுரைத்தீர்
1152 தமிள் வணிக பெருமானே
1153 பாளான நிலத்திலிட்ட
1154 பயிரது போலென்னை விட்டு

---

591 சூரை – செடிவகை *(Zizyphus oenoplia)*. மூட்டடந்த – மூட்டு அடர்ந்த; cf. N8.27b, N10.83b மூடடர்ந்த/மூடடர்ந்த.

592 துள்ளாடபடவேண்டி. Cf. N8.27b துள்ளாடப்படவேங்கி. துள்ளாடுதல் – துள்ளத்துடித்தல் – துன்பம்.

593 பொறந்தீர் – போறீர். See N8.27b; cf. N10.83b வந்தீர்.

594 விளிச்சா – விழித்தால்.

595 சாத்துகறிர் – சாற்றுகிறீர் (explain in detail, speak; *TL* s.v.).

596 சய்யல். Probably தையல் – பெண், as in N2.45b. Cf. N8.27c சையல்; N10.83d சய்யல்.

597 தனப்பட யாரினப்படயார். Cf. தனம்படையார் தனம்படைத்தால், as found in N8.27c, N2.45b. Version N10 is silent on this point.

598 னாவுணர்ந்து – நாக்கு உலர்ந்து. Cf. N8.27c.

599 இணல் – நிழல். Cf. N8.27c.

600 ஆதினம். Obscure. The lexical question remains unresolved. I read contextually, in agreement with T.M.P., மறையிடம் (hiding place [probably a pit]).

601 ஆனதுண்டால் – இருக்கும் ஆனால்.

602 பாரி – பாரீர். Also line 1143.

603 முக்காட்டில் – கடும் காட்டில்.

604 பறைந்திருக்க (M.).

605 என்றான். More likely என்றா<ள்>. Cf. N10.84b, N8.27d.

606 தாளாயோ. This may mean தாழாதே போடி/போய்விட. Cf. N10.85b, N2.45d, N8.27d.

1155 வாளாதே நீர் போனால்
1156 வலிய பள வினையுனக்கு
1157 சூளாதோ செட்டியாரே
1158 சூள்ந்தாக்கால் உமை விடுமோ
1159 யினி விடுமோ செட்டியாரே
1160 யென் கய்யிலகப்பட்டீரே
1161 கனி மருவும் பூங்காட்டில்
1162 கல்லாலே கொன்ற பளி
1163 துணி[607] மருவும் தோளாரே[608]
1164 துணயுமத்து[609] விட்டீரே
1165 தனிவருமோ செட்டியாரே
1166 தனித்து உம்மை போக ஒட்டேன்
1167 போக ஒட்டேன் யென்றிசக்கி
1168 புத்தியெல்லாம்[610] தடுமாறி
1169 ஆகட்டே நீலி பள[611]
1170 அய்யா[612] மொளி பொய்யாது
1171 நீலி யென்று அறியாமல்
1172 நினைந்தனரே[613] மணம் புணர
1173 பாலி[614] யென்றும் சூலியென்றும்[615]
1174 பக்குவப் பெண் அனுதாராம்[616].
1175 வாலிபத்தில் னாநொரு பெண்
1176 வலிய அகப்பட்டேநே.
1177 ஆரானும்[617] விடுவாளே[618]
1178 ஆனாக[619] பிறந்தவர்கள்
1179 நாணாமல் சுளுக்காமல்[620]
1180 நளுக்காமல் திரிவாரோ
1181 வீணாக நடவாதே.
1182 விளலி[621] சும்மா போய் விட்டி[622].
1183 புருசமுடன்[623] உமை துடர்ந்தேன்.
1184 பேருமில்லா[624] போய் விடவோ
1185 வரிசயுடனீருமிப்போ

---

[607] துணி மருவும் – துணிவு படும்.

[608] தோளாரே. This may mean தோழமை – நட்பு. Cf. N10.85c, N8.28a.

[609] துணயுமத்து – துணையுமற்று.

[610] புத்தியெல்லாம். I take this to refer to Icakki, on the basis of N10.86a போகவிட்டேன் என்றிசக்கி புத்தியெல்லாம் அவன் கேட்டு.

[611] பள – பழி.

[612] அய்யா – அப்பா. Cf. N10.86b *vacaṉam*: நமது தந்தை சொன்ன வார்த்தை சரி.

[613] Lines 1171-2 are corrupt. I emend to <நீலியென்பதல்லாதே நினைத்த நேரம்> and follow more or less N8.28b: நீலியென்பதல்லாதே நினைத்த நேரம் புணர்வதற்கு. N10.86b reads நீலிஎன்றதல்லாதநினைத்த நோம்புதான் புணர (Don't think of me as Nīli. I am a modest woman; I am your wife).

[614] பாலி. Nāṭār dialect. I read பாவி (wicked woman), or more precisely, பாவி என்று [நினைக்காதே]. பாலி (young damsel) is very unlikely. Cf. N10.86d, N8.28b, N2.46c பாலியல்ல, where the word appears with a negative.

[615] சூலி – *Cūlinī* (the goddess Durgā) and சூலி என்று [நினைக்காதே] respectively. Another possible reading would be கருப்பவதி (pregnant woman), but this is very unlikely. Cf. N10.86d, N8.28b, N2.46c சூலியல்ல, where the word appears in a negative sense.

[616] அனுதாராம் – அமுதாராம். Cf. N8.28b பக்குவபட் டனுதாரம்.

[617] ஆரானும் – யாரொருவன், யாரானும்.

[618] விடுவாளே. A scribal error. Em. விடுவா<ரே>/விடுவா<ர்களோ>. Cf. N8.27b.

[619] ஆனாக – ஆணாக.

[620] சுளுக்காமல் – சுளிக்காமல்.

[621] விளலி – விழலி – பயனில்லாத பெண். Cf. N8.28.b, N2.46d.

[622] விட்டி. I read விடடி. Cf. N8.28b, N2.46d.

[623] புருசம். I read பிரியம் (love, affection). Cf. N8.28b பிரியம்.

[624] பேர் – பெயர்.

1186 மணமுடியாதேயிருந்தால்
1187 கனிமருவும்[625] சுடுகாடு
1188 களுதயும் போல் பிரளேனோ[626]
1189 தீண்டாதே பெண் கொடியே
1190 செட்டி பெற்ற[627] கொம்பல்லவோ[628]
1191 பெட்ட[629] கொம்பென்றீரே[630].
1192 பேர்பெரிய செட்டியாரே
1193 வட்டிக்கிட்டு பாற்ப்பதற்கு
1194 மண்டலத்தில் யெங்களம்மை
1195 பொட்டளகும் பாவினயும்[631]
1196 பொன்னெளுத்தும் ஒவ்வாது
1197 கட்டளகும் பாவினயும்
1198 கண்டா கொண்டாசை கொள்வார்.
1199 செட்டிகுல பெருமாளே
1200 செட்டியருகே வாருமென்றாள்.
1201 உன் வலக்கைதான் பிடித்து
1202 ஊரகத்தே தானிருப்பார்[632]
1203 பின் வலக்கை யார்தருவார்
1204 பெண்மதியால் கெட்டேநே[633]
1205 முன் வலக்கையானதென்ன
1206 மோகன பெண் ஆனாலும்[634]
1207 ஒத்து கேளாயிசக்கி
1208 உனக்குறுதி சொல்லுகிறேன்
1209 கொத்து கொட்டை மொகூஷ்றுமோ[635]
1210 கொண்ட மோர் கடைவார்களோ
1211 பத்தி[636] கொண்டியாதே பளிகாறி மாயிசக்கி
1212 யின்னேரம் போய் விட்டியென்றுரைத்தார்[637] யிவ்விடத்தில்.
1213 முன்னேரமானாலு[638] முகம் திரும்பி யென்னுடய

---

[625] கனிமருவும். Em. க<ரி> மருவும் on the basis of N8.28c.

[626] பிரளேனோ – புரளேனோ – உருள்தல். Note that at this point N8.28c-29b and its twin version, N2, continue on with a thirty-two-line dialogue between Icakki and the Cetti that is found neither in the base version N1 nor in the longest version, N10.

[627] பெற்ற. Cf. N10.87c பெட்ட.

[628] கொம்ப – கொம்பு. Cf. N10.87c கொப்பு. According to N10, this is spoken by the Ceṭṭiyār.

[629] பெட்ட – பெட்டை/பொட்டச்சி – பெண். Cf. N10.87d பொட்ட.

[630] According to N10.87d, this is spoken by Icakki.

[631] பாவின – பாவனை < Skt. *bhāvanā.*

[632] There is some confusion as to who has married whom and whose words these are. N10.89a reads at this point: வனிதையரே உனக்கேத்தமணவாளன்யார்போடி / உன் வலக்கை முன்பிடித்தோன் ஊரிடத்தேதானிருக்க / பின் வலக்கை யார்தருவார் (O lady, who [could be] a suitable husband for you? Go away! The man who took your right hand is in town. So afterwards who else would marry [you]?). By contrast, the prose part *(vacaṉam)* in N10.89c that follows the lines in question reads: நான் ஊரில் சென்று என் மனவி யோடுவாழ்ந்து இருக்கிறேன் – என்றான் வனிகேசன் ("I live with my wife in town," said the merchant). An answer to the initial question lies in considering the marriage customs. Clearly the right hand (வலக்கை) refers to the bride, since the bridegroom gives his left hand in the marriage ceremony. Therefore the speaker must be the Ceṭṭi.

[633] I take these words as coming from Icakki, since the term பெண்மதி (or பெண்புத்தி) is only in usage among women. (I would like to thank T.M.P. for pointing this out.) Note the well-known Tamil proverb used by women: பெண்புத்தி பின் (A woman, given her poor knowledge, is slow to catch on [lit.: realises only afterwards]). For the proverb, see Lazarus 1991:518, No. 7345.

[634] Cf. N10.89a-b முன்வலக்கரமுடையமோகனபெண்ணானாலும் / என்வலக்கையானதன்ன நானுக்காளில்லையடி (Even though you are a lady of seductive charm, I did not marry you).

[635] மொகூஷ்றுமோ – முளைத்திடுமொ. A proverb.

[636] பத்தி – பற்றி.

[637] விட்டி – விடடி.

[638] முன்னேரமானாலு – முன்னேரமானாலும்.

அனியாயமோ[639] கெடுவா[640] அதட்டாதே போய் விட்டி[641]
தேயிராயம்[642] போய்[643] வெருண்[644] திரண்ட மாகாட்டகத்தில்
உயிராயம்[645] தீர[646] வந்தாள் ஒருதி யென்றோடலுற்றானே.
ஓடுகிறான் செட்டி வணிகேசனவனும்
உற்றதொரு பக்கறயும் தோளிலேயிட்டு
காலில் வில்லை செருப்பு கலீர்கலீரென்ன[647]
கடுவாய்கிட்ட வந்தனரி காட்டிலே போவது போவது போல
பதறியோடி வணிகேசன் பளக நகர் காட்டில்
பாவி கண்ணில் னாமள[648] வீணிலகபட்டேன்.
ஆவி உயிர் போனாலல்லோ தெரியும் காண்
அல்லாத[649] பாவி அகல போவாளோ.
காரிகைக்கு யேற்ற கணவன் ஊர்திலேயுண்டும்[650]
கள்ளத்தனமாக யிவள் கொல்லவே வந்தாள்.
கொல்ல வந்தாளென்று யென்னை பேசுறீர்.
கொள்ள முதல் கொடுத்ததுண்டோ கள்ளமாகவே
கள்ளமாக உம்முடைய மாமி[651] யென்னுடய தாயார்
கைமாலி[652] செய்ததற்க்கு உம்மை னோவேனோ.
கைமாலி யென்று பேசுறாய் பெற்ற தாய்த்தான்
காட்டுக்குள்ளே துடர் சொல்லி கூட்டிவிட்டாளோ.
விட்டதினால் தேடி வந்தேன் உம்மை தேடினார்[653].
வெயிலாத்த[654] போகுதில்லை மெல்ல நடவுங்காண்.
வெயிலாத்த போகுதில்லை மெள்ள நடவுங்காண்.
கட்டிலு தலையிணை மேலிட்டுறங்கி
காட்டுக் குள்ளே நடந்தலுத்து கண்ணுறக்கமில்லை.
கண்ணுறக்கமில்லை யென்றால் மாய யிசக்கி

---

[639] அநியாயம். I read here வல்லமை (power; force) rather than the given word (which means: uselessness; wrong action). I base my decision on N10.90a (prose part): என்னைதனிமையாகவிட்டு ஓடபார்க்கிறீர்/ஆனால்என்வல்லமைஉமக்கு தெரியாது (You're trying to run away and abandon me. But you don't know my power).

[640] கெடுவா – கெடுவாய். Note that in N1 the line is spoken by two successive speakers: Icakki and the Ceṭṭi. Such is not the case in the corresponding lines in N10.91a-b, which contains only words of the Ceṭṭi. It is worthy observing how the different versions either skip over text or rearrange it. For instance, N10.90d-91a-b reads quite differently, containing interesting dialogue that the base version at the same point (N1.1213-4) ignores: N10.90d; Icakki's speech: இன்னேரம்போய்விடடி என்று ரைத்தீர்இவ்வனத்தில் / முன்னேரம் ஆனாலும் முகம்திரும்பிஎன்னோடு / பொன்னார்தனம் குலையபொருந்தியொருதலமிருந்தால் / அன்னேரம் தெரியுமென்ன – உம் / ஆண்மையும் பெண்மையுமோ. N10.90ab; the Ceṭṭi's speech: அனியாயமோகெடுவாய்அலட்டாதேஎன்னைவிட்டு / [...] ஒளியாமல்வழியாக உள்ளதல்லாம்தீர்த்து / வந்தேன் /இவளோடுவாதாடினால்இனிபிளைக்கமாட்டோம் என்று [...] ([Icakki:] In this forest you urge me to leave at once. Even you said so before, please turn (now) your face towards me. If you enjoy me one time, squeezing my beautiful breasts, you will come to know your male sexual power and my female sexual power, won't you? [The Ceṭṭi:] You'll completely ruin me by your useless action. Don't threaten [me]! Hey, leave at once! I haven't hidden [from you]. I came having lost everything. [To himself:] If I argue with her, I won't escape).

[641] விட்டி. Read விடடி.

[642] தேயிராயம் – செயிர்+ஆயிரம். Cf. N8.29c, N10.90b செயிராயம்.

[643] போய்வெருண். A scribal error. Read போலிருண்ட. Cf. N8.29c, N10.90b.

[644] வெருண் – இருண்ட.

[645] உயிராயம். ஆயம் is unclear. It could mean உயிர்+ஆயம், if we read ஆயம் as ஆயுள் < Skt. *āyus* (lifetime). However, it could as well be interpreted as the bow-song singer's meaningless repetition of the syllables -ஆயம் of lines 1214 and 1215.

[646] தீர – தீர்க்க.

[647] கலீர்கலீரென்ன. An echo word.

[648] னாமள – நாம். பேச்சு வடிவம் (ST).

